**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.53/2025 - PW- 13**

| | |
|---|---|
| Name | திரு. கார்த்திக் |
| Husband/Father Name | ஏழுமலை |
| Village /Area | தணிகைபோளூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 36 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 24.11.2025.

**(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கீழந்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.09.2024 அன்று நடந்த சம்பவம் குறித்து 06.09.2024 அன்று இச்சிப்புத்தூர் கிராம நிர்வாக அலுவலராகவும், கிழவனம் கிராம பொறுப்பிலும் இருந்த என்னை ஆய்வாளர் அவர்கள் தொடர்பு கொண்டு கிழவனம் கிராமத்தில் நடந்த கொலை வழக்கு சம்பந்தமாக எதிரிகளை கைது செய்திருப்பதாகவும், அவர்களை விசாரணை செய்ய வேண்டியும், அதற்கு சாட்சியாக எங்களை இருக்க கோரியும், கிழவனம் ஏரி அருகே வருமாறு அழைத்ததன் பேரில் நானும் என்னுடைய கிராம உதவியாளர் திரு.பிரேமானந்த் ஆகியோர் சென்றோம்.

அங்கு காவல் ஆய்வாளர் எத்திராஜ், சுப்பிரமணி ஆகியோர்களை கைது செய்து வைத்திருந்தனர். நாங்கள் சென்ற பிறகு எங்கள் எதிரில் மேற்படி எதிரிகளை கொலை நடந்தது சம்பந்தமாக

விசாரணை செய்தனர். மேற்படி எதிரிகள் ஏற்கனவே நில பிரச்சனை இருந்ததாகவும், அந்த நில பிரச்சனையில் ஏற்கனவே பாஸ்கர் என்பவர் இறந்து விட்டதாகவும் அதனால் சந்திரன் என்பவரை கத்தியாலும், கல்லாலும் தாக்கி கொலை செய்ததாகவும் வாக்குமூலம் அளித்தனர்.

எத்திராஜ் என்பவர் சந்திரனை கத்தியால் வெட்டியதாகவும், சுப்பிரமணி என்பவர் சந்திரனை கல்லை தூக்கி போட்டு கொன்றதாகவும் கூறினர். அந்த வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் தனித்தனியாக பதிவு செய்தார்கள். மேலும், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்திரனை தாக்கி கொலை செய்த இடத்தை அடையாளம் காட்டியும், எதிரியின் வீட்டு அருகில் இருந்து கத்தி மற்றும் கல்லையும் மேலும் இரத்த கறை படிந்த உடைகளையும் எங்கள் முன்னிலையில் எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்தனர். சம்பவ இடத்தை ஆய்வாளர் வீடியோ மற்றும் போட்டோ எடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்து வழக்கு சொத்துக்களை எடுத்து ஆஜர் செய்த போது போலீசார் எடுத்த புகைப்படம் தான் அது (எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) **சா.பொ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சுப்பிரமணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் மற்றும் எதிரி எத்திராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அவைகள் முறையே **அதசாஆ.8** மற்றும் **அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய வழக்கு சொத்துக்

குறித்த கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடைய தான் அவைகள் முறையே **அதசாஆ.10** முதல் **அதசாஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்துக்களான கத்தி மற்றும் கல் மற்றும் இரத்தக் கறை படிந்த உடைகளான T- சர்ட் ஒன்று மற்றும் சட்டை ஒன்று ஆகியவை சம்பவ இடத்தில் இருந்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாகும். ஏற்கனவே கத்தி சா.பொ.1 ஆகவும், கல் சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இரத்தக்கறை படிந்த T- சர்ட் **சா.பொ. 5** ஆகவும், இரத்தக் கறை படிந்த அரைக்கை சட்டை **சா.பொ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் வெள்ளை சட்டை அணிந்திருக்கும் முதல் எதிரி தான் எத்திராஜ் ஆவார். அவருக்கு அடுத்து இரண்டாவதாக நிற்கும் சுப்பிரமணி தான் இரண்டாவது எதிரி ஆவார். மேற்படி நபர்கள் தான் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தும், வழக்கு சொத்தை எடுத்து ஆஜர் செய்த நபர்கள் ஆவார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் 12 வகுப்பு தேர்ச்சி பெற்று டிப்ளோமா படித்துள்ளேன். எனது சொந்த ஊர் அல்லியப்பன் தாங்கல் கிராமம், தணிகைபோளூர் ஊராட்சி. நான் 2019-ம் வருடத்தில் இருந்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கிழவனம் கிராம பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக 6 மாதம் பணிபுரிந்தேன். நான் முதல்

விசாரணையில் கூறிய சங்கதிகளை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறியுள்ளேன்.

எனக்கு முதன் முதலில் போன் செய்து அழைத்தது காவல் ஆய்வாளர் தான். மதியம் 1.30 மணிக்கு போன் செய்து அழைத்தார். எங்களது அலுவலகம் இச்சிபுத்தூரில் சம்பவ சமயத்தில் இருந்தது. சம்பவ இடமான கிழவனத்திற்கும் இச்சிபுத்தூருக்கும் இடையே 2 அல்லது 3 கி.மீ இருக்கும். போலீசார் அழைத்த உடன் கால் மணி நேரத்திலிருந்து 20 நிமிடத்திற்குள் சென்றுவிட்டேன். இருசக்கர வாகனத்தில் தான் சென்றோம்.

சம்பவ இடத்தில் இருந்து மதகுக்கரை எவ்வளவு தொலைவில் இருந்தது என்றால் ஏரிக்கரையை ஒட்டினார் போல் தான் இருந்தது. நாங்கள் சென்ற போது பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. முதல் எதிரி பாஸ்கர் வீட்டருகே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் தான் எதிரிகள் சொல்ல சொல்ல தட்டச்சு செய்தார். Print அந்த இடத்திலேயே வேறொரு நபர் சென்று எடுத்து வந்தார்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் எத்தனை பக்கங்கள் இருந்தது என்றால் தலா இரண்டு பக்கங்கள் இருந்தது. கடைசியில் நான் கையொப்பம் இட்டேன். முதல் எதிரியும் இரண்டாம் எதிரியும் தனித்தனியாக தான் ஒப்புதல் வாக்குமுலங்கள் கொடுத்தார்கள்.

சம்பவ இடத்தில் சுமார் 4.30 மணிவரை இருந்தோம். நாங்கள் மதகுக்கரைக்கு சென்றோம். மதகுக்கரையில் வைத்து ஆவணங்கள்

ஏதாவது கையொப்பம் இட்டேனா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் இட்டேன். கைப்பற்றுதல் மகஜர் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் கத்தி மற்றும் கல் எடுத்த இடங்களில் தான் தயார் செய்யப்பட்டது.

நான் முதன் முதலாக சம்பவ இடத்திற்கு வந்த போது கத்தியும், கல்லும் அங்கு இருந்ததா என்றால் இல்லை எதிரிகளை விசாரித்த போது அவர்கள் தான் கத்தி மற்றும் கல்லையும் புதரில் ஒளித்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களான சா.பொ.4 –ல் கத்தி மற்றும் கல் உள்ளதா என்றால் இல்லை. புகைப்படத்தில் முதல் எதிரி அவரது கையை புதரில் காட்டுகிறறா இல்லை ரோட்டில் காட்டுகிறறா என்றால் ரோட்டை தான் காட்டுகிறார்.

மதகுக் கரையில் இருந்து முதல் எதிரியின் வீடு 200 அடியிருக்கும். 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்று சொன்னால் சரிதான். முதல் எதிரியின் வீட்டின் எதிரில் என்ன இருந்து என்றால் பள்ளி இருந்தது. முதல் எதிரி எத்திராஜின் வீட்டிற்கு எதிரே ரேஷன் கடை தான் உள்ளது என்றும், நான் உண்மையாகவே எத்திராஜின் வீட்டிற்கு சென்றிருந்தால் அதை பற்றி கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு எதிரே இருந்த புதரில் இருந்து தான் கத்தியை எடுத்துக் கொடுத்தார்.

முதல் எதிரி எத்திராஜ் வீட்டருகே எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் விட்டிற்கு செல்லவில்லை சம்பவ இடத்திற்கு தான் சென்றோம். குற்றம் இழைத்த நபரகள் 05.09.2024 முதல் 06.09.2024 வரை சித்தேரி மதகுக்கரையில் இருந்தார்கள் என்பது

நம்பும் படியாக இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் கைது செய்யவில்லை என்றும் எதிரிகளை விசாரணைக்காக வீட்டில் இருந்து அழைத்து சென்று எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களில் நான் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் முன்னிலையில் எத்திராஜ் வீட்டில் இருந்து எந்த ஒரு டீ சர்ட்டும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் அவர் வீட்டருகே செல்லவில்லை.

இரண்டாம் எதிரி சுப்பிரமணியின் வீட்டிற்கு சென்றோமா என்றால் செல்லவில்லை. என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும், எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.24 17:25:24 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.